**வட மத்திய மகாாண சபை 2018**

---

1. நிதிக் கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

வட மத்திய மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கையில் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தல் தகவல்களின் சாராம்சத்தைக் கொண்டமைந்துள்ள 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1987 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தில் 23(1) பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(3) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபை சட்டத்தில் 23(2) பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளின்படி சாராம்ச அறிக்கை மற்றும் 11(2) உப பிரிவு பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தில் 10(1) உபபிரிவு பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

இவ்வறிக்கையில் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, நிதிக் கூற்றுகளில் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் வட மத்திய மாகாண சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுகள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய தரப்புகளதும் பொறுப்புகள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரி அடங்கலாக அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4** நிதிக் கூற்றுகள் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு பலவினங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்தை அறிவுறுத்தப்பட்டது.

1.5 ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

---

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின்படி மாகாண சபையின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் நேரொத்ததாகும்.

## 1.6 நிதிக் கூற்றுகள் தொடர்பான அபிப்பிராயம்

### 1.6.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| (அ) | இலாபத்திற்கு எதிராக பதிவழிக்க வேண்டிய ரூபா.4,395,778 ஆன நட்டங்கள் மற்றும் பதிவழிப்புகள், சலுகை கொடுப்பனவுகள் மீளாய்விற்கான ஆண்டில் நிதிசார் கூற்றுகளில் இலாபத்திற்கு சேர்க்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது. | நட்டங்கள் மற்றும் பதிவழிப்புகள், சலுகை கொடுப்பனவுகள் இலாபத்திற்கு எதிராக பதிவழித்தல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | மத்திய அரசாங்கத்தின் விவசாய அமைச்சு, நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்க-ப்பட்டிருந்த மொத்தம் ரூபா.5,259,803 ஆன கட்டுநிதி நிதிக் கூற்றுகளில் ‘‘மீள செலுத்தப்பட்ட அளிப்பு அல்லாத வேறு கிடைக்கப்பெறுவனவைகளாக’’ அதாவது செலவினமாக காட்டப்பட்டிருந்தது. | இந்த தொகை ஏனைய கிடைக்கப்பெறுதலாக காட்டப்படுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

### 1.6.2 இணங்கப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

பின்வரும் இணங்கப்படாதவைகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| (அ) | பொது வைப்பு கணக்கிற்கு ஏற்புடையதாக 04 பிரதேச செயலகங்களால் சமர்ப்பிக்கப்-பட்டிருந்த மீதிகளை உறுதிப்-படுதல் மற்றும் நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த மீதிகளுக்கிடையில் ரூபா.923,233 ஆன இணங்கப்-படாத வேறுபாடு காணப்பட்டது. | மீதிகளை சரியாக உறுதிப்படுத்திக் கொண்டு நிதிக் கூற்றுகளில் காட்டப்-படுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | 2101 வாகன விடயத்தின் செலவு ரூபா.73,617,500 ஆயினும், அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் என்பவற்றின் நிதிக் கூற்றுகள்படி ஆண்டில் வாகனங்களை கொள்வனவு செய்தல் பொருட்டு செலுத்தியிருந்த | அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் என்பவற்றில் சரியான தகவல்களை பெற்றுக்-கொண்டு அவற்றுடன் ஒப்பிடப்பட்டு மாகாண சபையின் நிதிக் கூற்றுகள் தயாரித்தல் | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| ரூபா.119,666,719 காரணமாக ரூபா.46,049,219 அன வேறுபாடு காணப்பட்டது. | வேண்டும். |

1.6.3 கணக்காய்விற்கு தேவையான எழுத்திலான சாட்சிகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| 04 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் தொடக்கம் இருந்து வருகின்ற அமைச்சுக்கள்/திணைக்களங்கள் 04 இற்கு ஏற்புடையதாக தீர்க்கப்படாதிருந்த ரூபா.27,861,802 ஆன கட்டுநிதி மீதிகளின் செவ்வைத்தன்மை உறுதிப்-படுத்திக் கொள்வதற்கு போதியஎ-விலான சாட்சிகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றின் கணக்குகளுக்கு ஏற்புடையதான எல்லா சாட்சி-களையும் கணக்-காய்விடம் சமர்ப்பி-க்கப்படுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

1.6.4 இணங்கியொழுகாமை

சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமை

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணங்கியொழு காமை | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆந் திகதிய 7/2013 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலா-ளரின் சுற்றறிக்கையில் 13.1 பந்தி | கலென்பிந்துனு-வெவ மத்திய மகா வித்தியாலயத்தில் 2018 ஆம் ஆண்டில் 6 ஆவது தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்த மாணவர்-களின் பெற்றோ-ர்களால் மற்றும் அன்பளிப்பாளர்களா ல் வழங்கியி-ருந்த பாடசாலை-க்கான தளவாட-ங்கள், மற்றும் 07 உபகரண உருப்-படிகளுக்கான 439 அலகுகளை பொருட் பதிவேடு-களில் அல்லது இருப்பு புத்தகங்-களில் உள்ளடக்-கப்படவில்லை. | 2013 ஆம் ஆண்டு நவம்பர் சுற்றறிக்கையின் 13.1 பந்தி பிரகாரம் நடவ-டிக்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்பட-வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2015 ஆம் ஆண்டு சனவரி 29 ஆந் திகதிய 5/2015 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரது சுற்றறிக்கையின் 08 ஆவது பந்தி | கலென்பிந்துனு-வெவ மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் அவர்க-ளால் பெற்றோ-ர்களிடமிருந்து ரூபா.645,000 தொகை பணம் சேர்க்கப்பட்டி-ருத்தல். | சுற்றுநிருபத்தில் 08 ஆவது பந்தி பிரகாரம் பெற்றோர்களிட-மிருந்து பணம் சேர்க்கப்பட இயலாது. | அபிப்பிராயம் தெரிவிக்கப்பட-வில்லை. |

2. வருமான முகாமைத்துவம்

---------------------------------

2.1 வருமானம் திரட்டும் முன்னேற்றம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவ-லரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபையின் வருமானம் கணக்கு கொடுக்கும் அலுவலர்கள் மூன்று பேர்களின்கீழ் பேணிச் சென்ற வருமான குறியீடு 13 இற்கு ஏற்புடையதாக 2014 – 2018 ஐந்தாண்டு காலவெல்லையை கவனத்தில் கொள்கையில் ஒழுங்குமுறையில் 2014 ஆம் ஆண்டில் மற்றும் 2018 ஆண்டுகளில் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா. 2,303 மில்லியன் தொகை மற்றும் ரூபா. 3,645 மில்லியன் தொகை என்ற எண்ணிக்கைகளுக்கிடையில் திரட்டியிருந்த வருமானம் ரூபா. 2,237 மில்லியன் தொகை மற்றும் ரூபா 3,231 மில்லியன் தொகை ஆகியிருந்தது. அதாவது 2014 ஆம் ஆண்டில் குறித்த வருமான குறியீடு 13 இற்கு ஏற்புடையதாக மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 97% ஆன உண்மையான வருமானம் 2018 ஆம் ஆண்டில் 89% வரை குறைந்திருந்தது. | ஆண்டுதோறும் வருமானம் விருத்தி செய்து கொள்ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | மாகாண சபையால் 2018 ஆம் ஆண்டில் திரட்டியிருந்த ரூபா.288,062,379 ஆன நீதிமன்ற அபராத வருமானத்தில் 34% அதாவது ரூபா.98,044,158 ஆன தொகை மேலும் 26 உள்ளூராட்சி நிறுவனங்களிடம் செலுத்த வேண்டியிருந்தது. | திரட்டுகின்ற எல்லா நீதிமன்ற அபராத வருமானங்ளையும் உள்ளூராட்சி நிறுவன-ங்களிடம் செலுத்தப்-படல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | மாகாண சபையால் 2018 ஆம் ஆண்டில் திரட்டியிருந்த ரூபா.149,739,172 தொகையிலான முத்திரை கட்டணங்கள் வருமானத்தில் 24% ஆன தொகை | திரட்டுகின்ற எல்லா முத்திரை கட்டண வருமானங்களை உள்ளூராட்சி நிறுவன-ங்களிடம் செலுத்தப்- | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | அதாவது ரூபா.35,231,855 ஐ மேலும் 13 உள்ளூராட்சி நிறுவனங்களிடம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. | படல் வேண்டும். | |
| (ஈ) | 1990 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க வடமத்திய மாகாணத்தின் நிதி பட்டயத்தில் XII ஆவது அத்தியாயத்தில் 40 (2) பிரிவு பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் இரண்டு நொத்தாரிசுகளால் ஒப்பமிடப்பட்டிருந்த 32 சாதன பத்திரங்களின்மீது அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா.728,250 ஆன முத்திரை கட்டணங்கள் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமாகும்போதும் அறிவடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | நொத்தாரிசுகளால் ஒப்பமிடுகின்ற எல்லா சாதனபத்திங்களின்மீது அறவிடப்பட வேண்டிய முத்திரை கட்டணங்களை அச்சந்தர்ப்பத்திலயே அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

03. நிதி மீளாய்வு
------------------------

3.1 நிதிசார் விளைவு
----------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளின்படி 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக மாகாண சபையின் நிதிசார் விளைவு ரூபா.275,543,746 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு எதிராக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா.305,268,801 ஆகியது.

3.2 வருமானம் மற்றும் செலவின ஏற்றத்தாழ்வுகள்
-----------------------------------------------------------------

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் நிதிசார் விளைவு ரூபா.580,812,547 ஆல் அதிகரிப்பதற்கு தமது உருவாக்கும் வருமானம் மற்றும் வேறு வருமானங்கள் ஒழுங்குமுறையாக ரூபா.300,019,591 மற்றும் ரூபா.97,422,281 ஆல் அதிகரிப்பும், பயிற்சி மற்றும் ஆற்றல் அபிவிருத்தி செலவு மற்றும் ஏனைய செலவினம் ஒழுங்குமுறையாக ரூபா .19,758,581 ஆல் மற்றும் ரூபா.1,252,248,581 ஆல் குறைதலும் பிரதான காரணமாக அமைந்திருந்தது.

04. பட்டயக் கணக்குகள்/நிதியக் கணக்குகள்/வர்த்தக முற்பணங்கள் மற்றும் ஏனைய முற்பணக் கணக்குகள்
----------------------------------------------------------------------------------------------------

4.1 பட்டயக் கணக்குகள்/நிதியக் கணக்குகள்
-------------------------------------------------

(அ) வட மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை
------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| i. கடந்த ஆண்டுகளில் கணக்காய்வு ஐயப்பாடுகள் மற்றும் அறிக்கைகள்மூலம் சுட்டிக் காட்டியுள்ள எல்லா குறைப்பாடுகளையும் செவ்வையாக்கப்பட்டு சீராக்கமை | கணக்காய்வு ஐயப்பாடுகள் மற்றும் அறிக்கைகள்மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள எல்லா குறைப்பாடுகளையும் செவ்வையா- | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் நிதிசார் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள ரூபா.796,570 ஐ முன்னரான ஆண்டுக்கான சீராக்கல் பெறுமதி செவ்வையாகவில்லை. | க்கப்பட்டு சீராக்குதல் வேண்டும். | |
| ii. அதிகார சபை ஆரம்பமாகிய ஆண்டு தொடக்கம் வட மத்திய மகாண சபைக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா.5,332,092 ஆன மீதி மற்றும் வட மத்திய மாகாண சபையிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டியிருந்த ரூபா.16,653,387 ஆன மீதி நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தியிருந்ததுடன், மாகாண சபையின் இணக்கப்பாடு அல்லது அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் தீர்மானமின்றி பணிப்பாளர் சபையிடம் கிடைக்கப்பெற வேண்டியிருந்த ரூபா.16,653,387 ஆன மீதியை, அமைச்சிடம் செலுத்தப்பட வேண்டியிருந்த மணல் போக்குவரத்து வருமானத்திற்கு எதிராக மீளாய்விற்கான ஆண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தது. ஆயினும், மாகாண சபையிடம் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா.5,332,092 ஆன மீதியை சீராக்குவதற்கு இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இரண்டு நிறுவனங்க-ளுக்கிடையில் கிடைக்கப் பெற வேண்டிய மற்றும் செலத்தப்பட வேண்டிய மீதிகளை பதிவழித்தல் இரண்டு நிறுவன-ங்களின் இணக்க-ப்பாட்டுடன் மேற்கொள்-ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

(ஆ) மாகாண பிரதான அமைச்சர் நிதியம்

---------------------------------------------

| | | |
|---|---|---|
| 1992 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க பிரதான அமைச்சர் நிதிய பட்டயத்தின் 3(1) பிரிவுமூலம் நிதியத்தின் நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் மூலதனம் என்பன அதன் கட்டுப்பாட்டுச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. பிரதான அமைச்சர் மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள் இரண்டு பேர் அடங்கலாக 06 பேர்களைக் கொண்டமைந்த மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் நிதியத்தை, பேணிச் செல்ல வேண்டிய முறைமை பட்டயத்தில் காட்டியிருக்காத படியால் மாகாண சபை கலைக்கப்பட்ட திகதி தொடக்கம் நிதியம் செயலற்றிருந்தது. | மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் நிதியத்தை, பேணிச் செல்லும் முறை தொடர்பாக பட்டயத்தில் காட்டப்-படுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

4.2 வர்த்தக முற்பணக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள 11 நிலையங்களில் பயிற்றுவிக்க முடியுமான பயிலுநர்களின் எண்ணிக்கை 61 ஆயினும், கடந்த 06 ஆண்டுகளிலான காலப் பகுதிக்குள் பயிற்றுவித்திருந்த பயிலுநர்களின் எண்ணிக்கையில் சராசரி 17 ஆகியது. 09 நிலையங்களில் கடந்த 05 ஆண்டு காலப் பகுதியில் பயிற்சி பெற்ற 66 பயிலுநர்களில் 05 பேர் மட்டும் புடவைக் கைத்தொழில் துறையின் தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். | ஆகக்கூடிய வகையில் பயிலுநர்களின் எண்ணிக்கையினரை பயிற்றுவிக்க வேண்டுமென்பதுடன், தொழிலாற்றுவதற்கு பொருத்தமான வகையில் பயிற்சி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

05. தொழில்பாட்டு மீளாய்வு

5.1 செயலாற்றுகை

5.1.1 அரசாங்கத்தின் மானியங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| வட மத்திய மாகாண சபையிடம், மாகாணத்திற்கு உரியதான அபிவிருத்தி மானியங்கள் (PSDG), அளவுகோள் அடிப்படையிலான மானியங்கள் (CBG), விசேட துறைகளின் அபிவிருத்தி கருத்திட்டங்களின் மானியங்களின்கீழ்( கல்வி மற்றும் சுகாதாரம்) ரூபா. 4,012.7 மில்லியன் தொகையிலான ஒதுக்கீடுகளை அங்கீகரிக்கப்பட்டிருப்பினும், அந்த ஆண்டுக்குள் உபயோகப்படுத்தியிருந்த தொகை ரூபா. 3,089.8மில்லியன் அல்லது 72% ஆகும். | அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகளை ஆகக் கூடியதாக உபயோகப்படுத்தல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

5.1.2 மாகாண அபிவிருத்தி திட்டம்

| கண்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் மாகாண அபிவிருத்தி திட்டத்தின்கீழ் புதிய வேலைகள் மற்றும் தொடர் வேலைகளின் பொருட்டு ரூபா. 4,600.5 மில்லியன் தொகையிலான மதிப்பீட்டு பெறுமதிக்குரிய 1550 பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டிருப்பினும், அதில் ரூபா. 225 மில்லியன் தொகையிலான 107 புதிய வேலை பிரேரணைகளும் 20 தொடர் வேலை பிரேரணைகளும் நடைமுறைப்படுத்தியிருக்க- | எல்லா பணத் தொகை வழங்கல் திட்டம் பிரகாரம் உபயோகப்படுத்தல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

வில்லை. மேலும் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா.275 மில்லியன் தொகை மாகாண சபையால் செவிடப்படாது மிச்சப்படுத்தப்பட்டிருந்தது.

5.1.3 கல்வி
---------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| (அ) | தனியார்/ரஜரட்ட மகா வித்தியாலயத்தில் உயர் தர புவியியல் பாடத்தில் கற்பிக்கப்படும் ஆசிரியர் ஒருவர் 2018 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் ஒக்டோபர் 27 ஆந் திகதி வரை 96 நாட்கள் கடமைக்கு சமூகமளிக்கவில்லையெனிலும் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் மேற்கொண்டிருக்கவில்லை. | உரியவாறு கடமைக்கு சமூகமளிக்காத ஆசிரியர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | பொ/அம்பகஸ்வெவ மகா வித்தியாலயத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை க.பொ.த.(சா.தர) பரீட்சையில் தோற்றிய 246 மாணவர்களில் 172 மாணவர்கள் அதாவது 70% பேர் சித்தியடையவில்லை என்பதுடன், பொ/விஜயபுர மகா வித்தியாலயத்தில் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் க.பொ.த (சா.பரீட்சை) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கையில் 52% தொடக்கம் 40% வரை குறைவடைந்திருந்தது. | கல்வி மட்டத்தினை விருத்தி செய்து கொள்ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | சுங்காவில முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் க.பொ.த (சா. தர) பரீட்சையில் தோற்றிய 62 மாணவர்களில் 47 அதாவது 76% ஆங்கில பாடத்திலும், 36 மாணவர்கள் அதாவது 58% கணிதப் பாடத்திலும் சித்தியடையவில்லை என்பதுடன், 2017 ஆம் ஆண்டில் வர்த்தக துறையில் க.பொ.த (உ.த) பரீட்சையில் தோற்றிய 08 மாணவர்கள் எல்லா பாடங்களிலும் சித்தியடையவில்லை. | கல்வி மட்டத்தினை விருத்தி செய்து கொள்ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டில் க.பொ.த (சா.தர) பரீட்சை பெறுபேறுகள்படி விஜித்த மத்திய மகா வித்தியாலயம், லங்காபுர | கல்வி மட்டத்தினை விருத்தி செய்து கொள்ளுதல் | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | மகா வித்தியாலயம் மற்றும் விஜயராஜ மகா வித்தியாலயம் என்பவற்றில் ஆங்கில பாடத்தில் சித்தியடையாத 60% ஐ விஞ்சியிருந்தது. | வேண்டும். | |
| (உ) | லங்காபுர மகா வித்தியாலயத்தில் 2017 ஆம் ஆண்டில் க.பொ.த.(சா.த) பரீட்சையில் தோற்றிய 30 மாணவர்களில் 12 பேர் க.பொ.த உயர் தரத்திற்கு தகைமை பெற்றிருக்கவில்லை. | கல்வி மட்டத்தினை விருத்தி செய்து கொள்ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஊ) | 2014 ஆம் ஆண்டு திசெம்பர் 02 ஆந் திகதியில் 31/2014 ஆம் இலக்க கல்வி அமைச்சின் செயலாளரது சுற்றறிக்கை பிரகாரம் பாடசாலைகளில் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கான மதிப்பீட்டு செயற்பாடுகளின்கீழ், பொலன்னறுவை கல்வி வலயத்தில் 35 பாடசாலைகளை மேற்பார்வை செய்ய வேண்டுமாயினும். 08 பாடசாலைகளை மட்டும் மேற்பார்வை செய்யப்பட்டிருந்தது. அதேபோன்று ஒவ்வொரு பிரிவுகளிலும், 31 பாடசாலைகள்படி மீளாய்விற்கான ஆண்டில் மேற்பார்வை செய்ய வேண்டுமாயினும், தமன்கடுவ பிரிவில் 12 பாடசாலைகளையும், லங்காபுர பிரிவில் 10 பாடசாலைகளையும் மட்டும் மேற்பார்வை செய்யப்பட்டிருந்தது. | 2014 ஆம் ஆண்டு திசெம்பர் 02 ஆந் திகதிய 31/2014 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை பிரகாரம் பாடசாலைகளின் மதிப்பீட்டு செயற்பாடு-களின்கீழ் மேற்பார்வை செய்தல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |
| (எ) | அ/இக்கிரிகொல்லாவ அன்னூர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் விசேட கல்வி பொருட்டு ஈடுபடுத்த வேண்டிய 97 மாணவர்கள் சாதாரண வகுப்பு அறைகளில் கல்வி கற்கின்ற நிலையில் இருந்தனர். | விசேட கல்வி பொருட்டு ஈடுபடுத்த வேண்டிய நிலையில் இருந்த மாணவர்களின் பொருட்டு விசேட நிலையிலான வகுப்பு அறைகளை வழங்குதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஏ) | 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆந் திகதிய 2003/38 ஆம் இலக்க கல்வி அமைச்சின் செயலாளரது சுற்றறிக்கையில் 2.1.3 பந்தி பிரகாரம் கற்கையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களால் வாரமொன்றுக்கு 40 நிமிடங்களிலான 35 காலவெல்லைகளும் கற்பித்தலுக்கு மேலதிகமாக வகுப்புக்கு பொறுப்பாக செயற்படும் ஆசிரியர் ஒருவர் பொதுவாக வாரமெனர்றுக்கு 33 கலவெல்லைகளும் கற்பிக்கும் நடவடிக்-கைகளில் ஈடுபடுதல் வேண்டுமாயினும், அ/இக்கிரிகொல்லாவ அன்னூர் முஸ்லிம் மத்திய மகா | சுற்றுநிருபத்தின் ஏற்பா-டுகளை பின்பற்றுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

வித்தியாலயத்தின் 22 ஆசிரியர்கள் 02 இற்கும் 29 இற்கும் இடையிலான எண்ணிக்கையில் மட்டும் கற்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

5.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை
-----------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| | 2018 மார்ச் மாதம் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க திறைசேரி செயலாளரது சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையில் 02(அ) பந்தி பிரகாரம் அகற்றப்படுவதற்கு அடையாளம் காணப்பட்ட வாகனங்கள் 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 அந் திகதி 02/2015 ஆம் இலக்க அரச நிதி கூற்றறிக்கைமூலம் வழங்கியுள்ள ஆலோசனைகள் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 அந் திகதிக்கு முன்னர் அகற்றப்பட்டு முடிவுறுத்த வேண்டுமாயினும், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை 2018 வரை அகற்றப்படுவதற்காக அடையாளம் காணப்பட்ட 37 வாகனங்களை 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 04 ஆந் திகதியிலும் அகற்றப்பட்டு முடிவுறுத்துவதற்கு தவறவிடப்பட்டிருந்தது. அதேபோன்று குறித்த வாகனங்களை பாதுகாப்பின்றி உக்கிச் சலெவ்றத்கு இடமளித்தமையால் ஏலவிற்பனைஊடாக பெற்றுக் கொள்ள முடியுமான நிதிசார் பெறுமதி மேலும் குறைவடைந்திருந்தது. | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

5.3 தொழில்பாட்டு வினைத்திறமையின்மை
-----------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| (அ) | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் புள்ளிவிபரங்கள்படி சிறுநீரக நோய் நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களில் 60% ஆண்களாயினும், வட மத்திய மாகாணத்தில் நடைமுறைப்படுகின்ற சிறுநீரக நோய் நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் வினைத்திறனின்மை காரணமாக பங்குபற்றிய ஆண்களில் 25% ஆகியது. | சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ள எல்லா நோயாளர்களையும் க்ளினிக்களில் பங்கு பற்றச் செய்-வித்தல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சுகாதார சேவையை வினைத்திறனுடன் மேம்படுத்தும் நோக்கத்தில் அநுராதபுர மாவட்டத்தில் தெரிவு செய்த 03 மருத்துவமனைகளில் வெளி நோயாளர் பிரிவுகளை வலையமைப்பு செய்கின்ற கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி 2012 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் சாத்திய வள கற்கை மற்றும் அலுவலர்களை பயிற்றுவிக்காது மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பெறுமதி ரூபா.12,349,783 ஆன கணினி மென்பொருட்கள் மற்றும் துணை கருவிகளை வழங்கியிருந்த போதிலும், கருத்திட்டம் நடைமுறைப்படுத்தவில்லை. கொள்வனவு செய்திருந்த கணினி மென்பொருள் மற்றும் துணை கருவிகளில் ரூபா.9,684,543 ஆன அளவு தொழில்நுட்ப ரீதியாக காலம் கடந்திருந்ததுடன், எதிர் பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை காரணமாக செலவினம் பயனற்றதாகியிருந்தது. | கருத்திட்டம் தாமதமின்றி நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை தயாரித்தல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (இ) | கெபித்திகொல்லாவ சுகாதார அதிகாரப் பிரதேசத்தில் சிறுநீரக நோய்களுக்கு 65 கிலோ மீற்றர் தூரம் வந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் குருதி சுத்திகரிப்பு (Dialysis) மேற்கொள்கையில் ஏற்படும் சிரமங்களை தவிர்த்துக்கொள்வதற்கு கெபித்திகொல்லாவ ஆரம்ப வைத்தியசாலையில் குருதி சுத்திகரிப்பு அலகினை நிருமாணிக்கும் பொருட்டு 2016 ஆம் ஆண்டில் ரூபா.1,374,228 தொகை மாகாண சுகாதார சேவை திணைக்களத்தால் செலவிடப்-பட்டிருந்தது. அதேபோன்று இந்த பிரிவின் பொருட்டு 04 குறுதி சுத்திகரிப்பு வடிகட்டி இயந்தரங்கள், 04 கட்டில்கள் மற்றும் RO நீர் வடிகட்டல் முறைமைகள் அடங்கலாக துணை கருவிகளின் பொருட்டு ரூபா. 10 மில்லியனுக்கும் அதிகமான தொகை சுகாதாரம், போஷாக்கு மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சினால் செலவிடப்பட்டிருந்ததுடன், குறுதி சுத்திகரிப்பு இயந்திரங்களை பாதுகாத்தல் மற்றும் குருதி சுத்திகரிப்பு அலகினை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கு அதி சக்தி வாய்ந்த மின் பிறப்பாக்கல் இயந்திரமும் வழங்கப்பட்டிருந்தது. தொடர்ச்சியாக குளிரூட்டல் இயந்திரத்தை இயக்கும் | நிபுணத்துவ மருத்துவர் அடங்கலாக அலுவலர் குழாத்திடம் வழங்கியுள்ள குருதி சுத்திகரிப்பு அலகினை உரியவாறு உபயோகப்படுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன்.<br><br>அலுவலர் குழாத்தின் பற்றாக்குறை காரணமாக இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு இயலாதுள்ளதுடன், அதன் காரணமாக அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது எனவும். அலுவலர் குழாத்தினை பெற்றுக்கொள்ளுதல் நிருவாகத்திற்கு அப்பாற்பட்ட விடயம் எனவும் சுட்டிக்காட்டுகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | வகையில் 02 ஆண்டுகளுக்கு அதிகமான காலப் பகுதி மின்சாரம் பொருட்டு அதிக செலவினம் மேற்கொண்டிருப்பினும், நிபுணத்துவ மருத்துவர் அடங்கலாக அலுவலர் குழாமின்றி குருதி சுத்திகரிப்பு பிரிவு பயனற்று இருந்தது. நாளொன்றுக்கு 16 சிறுநீரக நோயாளர்களது குருதி சுத்திகரிப்பு மேற்கொள்வதற்கு முடியுமான இந்த அலகு பயனற்று இருந்த காலப் பகுதியில் சிறுநீரக நோயாளிகளுக்காக 11,680 தடவைகள் குருதி சுத்திகரிப்பு (Dialysis) மேற்கொள்வதற்கான ஆற்றல் இல்லாது போயிருந்தது. | | |
| (ஈ) | 1984 ஆம் ஆண்டில் மத்திய மருந்தகமாக (Dispensary) ஆரம்பிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் தொடக்கம் "C" தரத்தின் பிராந்திய மருத்துவமனையாக அபிவிருத்தி செய்த புகுவழி மருத்துவமனையில் 17 கட்டில்களுடன்கூடிய வாட் தொகுதி நிருமாணிக்கப்பட்டு, வதிவிட சிகிச்சையளித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று மருத்துவமனை நிலப் பகுதியில் மருத்துவரின் உத்தியோகபூர்வ இல்லம், சுகாதார பணியாளர்கள்ளின் பொருட்டு இரண்டு உத்தியோகபூர்வ இல்லங்கள், சாரதி உத்தியோகபூர்வ இல்லம் உள்ளிட்ட வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. ஆயினும், பிரதேசத்தில் நோயாளி மக்களின் பொருட்டு பயனுள்ள சுகாதார சேவைக்கு தேவையான மனித வளங்களை வழங்காமையால் குறித்த பிரதேச பிரதேச மருத்துவமனையை மீண்டும் மத்திய மருந்தகமாக நடைமுறைப்பட்டு வந்ததுடன், (Dispensary) கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் அழிவுக்கு உட்பட்டிருந்தது. | தேவையான வசதிகளை வழங்கி நோயாளர்களுக்கு நல்ல சுகாதார சேவை வழங்கப்படுதல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். அலுவலர் குழாத்தின் தேவைகளை நேர்வரிசை சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதுடன், அலுவலர் குழாத்தின் பற்றாக்குறை காரணமாக இந் நிலைமை ஏற்பட்டுள்ளது. |

5.4 காட்சி சார்ந்த முறைக்கேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| வட மத்திய மாகாணத்தின் சுற்றுலாத் துறை வியாபாரத்தின் ஊக்குவிப்பு பொருட்டு தொழில்நுட்ப் தரத்துடன்கூடிய ஆவணப்படம் வீடியோ நிகழ்ச்சி தயாரித்தல், மனம் கவரும் வகையில் படங்களுடன்கூடிய தரத்திலான புத்தகம் நிருமாணித்தல் மற்றும் முறையான | | |

தகவல்களுடன்கூடிய இணையத் தளம் உருவாக்கும் வகையில் பிரதான செயலாளரால் வழங்குநருடன், ரூபா.15,797,500 ஆன தொகைக்கு 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆந் திகதி ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) கருத்திட்டத்தில் பிரதான அம்சமான சுற்றுலாத் துறையினரை கவரச் செய்யும் வகையிலான இணையத் தளத்தினை உருவாக்குவதற்கு வழங்குநருக்குள்ள தகைமைகள் மற்றும் /அல்லது அதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட இணையத் தளங்களின் விபரங்கள் பெற்றுக்கொள்ளாமலும் விலைக் கோருதலுமின்றி வழங்குநர்களை தெரிவு செய்யப்பட்டிருந்தது. ஆகக் குறைந்த வகையில் வழங்குநர்கள் என்று காட்டப்பட்டிருந்த இணையத் தளமும் இயங்கும் நிலையில் இருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல்களை பின்பற்றுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. . |
| (ii) உடன்படிக்கை மேற்கொண்ட தொகையில் ரூபா.12,144,500 ஐ 2016 திசெம்பர் 26 ஆந் திகதியில் செலுத்தியிருந்த போதும் 2019 ஆண்டு செப்தெம்பர் 18 ஆந் திகதி வரை வழங்குநர்களால் இக் கருத்திட்டத்தை முடிவுறுத்தப்பட்டு மாகாண சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்குநரால் சம்பந்-தப்பட்ட வழங்-குதலை மேற்-கொண்ட பின்னர் மட்டும் கொடுப்ப-னவுகளை மேற்கொ-ள்ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |
| (iii) கருத்திட்டம் முடிவுறுத்தப்பட வேண்டிய திகதி குறிப்பிடப்படாமை, உடன்படிக்கையில் நிபந்தனைகள் முன்பாக இரு தரப்புகளும் ஒப்பமிடாமை உள்ளிட்ட பல்வேறு குறைப்பாடுகள் உடன்படிக்கையில் இருந்தமையால் வழங்குநருக்கு எதிராக சட்டத்துடனான நடவடிக்கை மேற்கொள்வதற்கு இயலாதிருந்தது. | உடன்படிக்கைகளை செவ்வையாக மேற்கொள்ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

5.5 அடையாளம் காணப்பட்ட குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| வட மத்திய மாகாண பிரதான அமைச்சினால் அபிவிருத்தி செய்திருந்த பொலன்னறுவை “தீப உயன” கருத்திட்டத்தின் 10,211 மீற்றர் அளவிலான புற் கரண்களை இடுவதற்காக ரூபா.26,548,626 ஐ செலுத்தப்பட்டிருந்தது. புற் கரண்களை இடப்பட்டிருந்த நில அளவிற்கு ஏற்புடையதாக திணைக்களத்தால் தாயரித்திருந்த சுவடு வரைவுபடி அதன் சதுர அளவு 9366 சதுர மீற்றர் ஆகியது. அதன்படி செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா.24,351,609 ஆகியதால் | நிறைவேற்றிய வேலைகளுக்கு மட்டும் செலுத்தல் வேண்டும். | 10,211 சதுர மீற்றர் அளவினை முற்றுமுழுதாக புற் கரண்களை இடப்-பட்ட போதும், குறுகிய காலப்-பகுதியில் அதில் 845 சதுர மீற்றர் அளவிலான புற் கரண்கள் கருகிய நிலையில் |

| | |
|---|---|
| மேலதிகமாக செலுத்தியிருந்த தொகை ரூபா.2,197,027 ஆகும். | காணப்பட்டன. |

5.6 ஒப்பந்த நிருவாகத்தின் குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின்/கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| (அ) இரண்டாவது சுகாதார முறை சார் அபிவிருத்தி கருத்திட்டங்களின் (SHSDP) ஒதுக்கீடுகளின்கீழ் வட மத்திய மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்திற்கு எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கு போதியளவிலான கொள்ளளவுடன்கூடிய 2500 சதுர அடிக்கு புதிய மூன்று மாடி கட்டிடமொன்றை நிருமாணிப்பதற்கு ரூபா.59,546,072 ஆன தொகைக்கு 2017 ஆம் ஆண்டு பெப்ருவரி 15 ஆந் திகதி ஒப்பந்த நிறுவனத்திடம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>(i) பின்னர் அதனை ஏழு மாடி கட்டிடமாக நிருமாணிப்பதற்கு தீர்மானித்து 1 ஆவது கட்டமாக கட்டிடத்தின் முதலாவது மாடி வரை ஆரம்ப நிருமாணிப்புகள் முறையான பெறுகை நடைமுறைக்கு அப்பாற்பட்டு முதலாவது உடன்படிக்கை தொகைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன்படி 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் 15 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு ஆலோசனை வழங்கி பின்னர் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 அந் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 15 ஆந் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டிருத்தலும், ஒப்பந்தக்-காரரால் நிருமாணிப்புகளை முடிவுறுத்தி ஒப்படைப்பதற்கு முன்னர் அதாவது 2018 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆந் திகதி கட்டிடத்தின் 11 – A நிருமாணிப்புகள் ரூபா.17,337,504 ஆன தொகைக்கு 40 நாட்களிலான அசாதாரண காலப் பகுதிக்குள் முடிவுறுத்துவதற்காக வேறு ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி II - A கட்டத்தின் நிருமாணிப்புகளை ஆரம்பிப்பதற்காக 1 ஆவது கட்டத்தில் நிருமாணிப்புகளை துரிதமாக முடிவுறுத்தப்பட வேண்டியுள்ளதால் கொன்கிரீட்களை பலப்படுத்துவதற்கு ரூபா.185,310 ஆன மேலதிக செலவினை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சாத்தியவள கற்கை மேற்கொள்ளா-மையும், மொத்த செலவின மதிப்பீடு தயாரிக்காமையும் பெறுகை வழிகா-ட்டலை பின்பற்றா-மையும் இந்த நிலைமைக்கு காரணமாகியுள்-ளதால் கருத்திட்டத்தின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை முறையான திட்டத்-திற்கு அமைவாக செயலாற்றுதல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்-றேன்.<br>கட்டிடத்தின் பூரண கண்காணிப்பு மாகாண பொறியி-யல் திணைக்-திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேலதிக விபரங்கள் அத் திணைக்களத்திட-மிருந்து பெற்றுக்-கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ii. பெறுகையின் குறைப்பாடுகள் மற்றும் ஏற்றுக்கொள்ள இயலாத காரணங்களின்மீது ஒப்பந்தக் காலப் பகுதியினை நீடிப்பதற்காக 1 ஆவது கட்டம் பொருட்டு விலை வேறுபடும் தன்மை ரூபா.4,185,040 ஆன தொகை ஒப்பந்தக்காரரிடம் செலுத்த வேண்டி நேரிட்டது. இந்தக் கட்டிடத்தின் திட்டமிடல் மற்றும் மதிப்பீடுகளின் பலவீனம் காரணமாக 10% ஆன எதிர்பாரா கொடுப்பனவு எல்லைகளையும் விஞ்சியிருந்ததுடன், முதலாவது மாடியின் கொன்கிரீட் பரப்பு விரிவாக்குவதற்கு ரூபா.3,960,196 ஆன தொகை மற்றும் மேலதிக கூரை நிருமாணிப்பதற்கு மேலும் அதிகளவிலான பணம் செலவிடுவதற்கு நேரிட்டிருந்தது. | திட்டமிடல், மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் முறையானவாறு மேற்கொள்ளுதல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். வருடாந்தம் கிடைக்கப்பெறும் பணத் தொகையினை கவனத்தில்கொண்டு நிருமாணிப்புகள் மேற்கொள்வதுடன், கருத்திட்டத்தின் பூரண கண்காணிப்பு மாகாண பொறியியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும். |
| (iii) அதேபோன்று நிருமாணிப்புகளில் நிலவிய பலவீனங்கள் நிலவியதுடன், மதிப்பீடுகளை தயாரிப்பதில் கவனயின்மை காரணமாக அப்புறப்படுத்திய வேலை விடயங்களை, மேலதிக வேலைகளாக நிறைவேற்றுகையில் கொன்கிரிட் 438.9 கனமீற்றர் பொருட்டு உடன்படிக்கை ரேட் அளவினை விஞ்சி ரூபா.1,245,595 ஆன தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீடுகள் தயாரித்தல் செவ்வையாக மேற்கொள்ளுதல் வேண்டும். | பதில் வழங்க முடியாது. எல்லா திட்டங்களும் மாகாண பொறியியலாளர் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) பலுகஸ்தமன திரு சமன்திலக்க அவர்களது வீட்டுக்கு அருகாமையிலிருந்து சிங்கபுர பிரதான வீதி வரை கூழாங்கல் பரப்பி அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்திற்கு ரூபா.11,194,750 செலுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) 01 கிலோ மீற்றர் ஆன இந்த வீதிகளின் வேலைகளை துரிதமாக முடிவுறுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டு 03 கட்டங்களாக பிரிக்கப்பட்டன. ஆயினும் ஒவ்வொரு கட்டங்களின் பொருட்டும் விலை கோருதல் 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 ஆந் திகதி மற்றும் 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் 26 ஆந் திகதி வரை 07 வாரங்களிலான காலவெல்லைகளுடனும், உடன்படிக்கை மேற்கொள்ளுதலானது 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் 04 ஆந் திகதி மற்றும் 2017 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆந் திகதி வரையிலான காலவெல்லைகளுடனும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதமாகும் போது இந்த | பெறுகை வழிகாட்டல்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | விசாரணை சபை நியமிக்கப்பட்டுள்ளது. அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் பதில் சமர்ப்பிக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| வீதியில் வேலைகளை முடிவுறுத்தப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்கு உபயோ-கப்படுத்த இயலாதிருந்தது. | | |
| (ii) முதலாவது கட்டத்தில் நிறைவேற்றிய வேலைகளையும் பார்க்க ரூபா.45,672 ஐ மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த தொகை அறவிடுதல் வேண்டும். | விசாரணை சபை நியமிக்கப்பட்டு-ள்ளது. அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் பதில் சமர்ப்பிக்கின்றேன். |
| (iii) கூழாங்கற்களை தாக்குப்பிடிக்கும் பலம் ஆகக்குறைந்ததாக 25 $N/mm^2$ ஆதல் வேண்டுமாயினும், 3 கட்டங்களில் 03 இடங்களில் பெற்றுக்கொண்டு பரிசோதனை செய்த 21 கூழாங கற்களில் 11 கூழாங்கற்கள் பலமாக தாக்குப் பிடிக்கும் உறுதி நிலை குறைந்துள்ளதாக தரக் கட்டுப்பாட்டு அறிக்கைகள்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | உரிய தரத்தில் கற்களை இட்டு மீண்டும் நிருமாணித்தல் வேண்டும். | விசாரணை சபை நியமிக்கப்பட்டு-ள்ளது. அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் பதில் சமர்ப்பிக்கின்றேன். |

## 5.7 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

## 5.7.1 தாமதமாகிய கருத்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவ-லரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| (அ) அருகாமையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை கருத்திட்டத்தின்கீழ் திரப்பனை மகாணாம கல்லூரியின் மூன்று மாடி வகுப்பு அறைகளின் கட்டிடம் மற்றும் ஆரம்ப கல்லூரியின் இரண்டு மாடி ஆரம்ப கற்கை வளங்கள் நிலையம் நிருமாணிப்பதற்கு ஏற்புயைடதாக ரூபா. 41,451,986 ஆன பெறுமதிக்கு 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆந் திகதி உடன்படிக்கை மேற்கொண்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் 13 ஆந் திகதிக்கு முதல் முடிவுறுத்தல் வேண்டும். 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆந் திகதி ரூபா.14,300,935 ஆன 30% வேலை ஆரம்பிக்கும் பொருட்டு முற்பணம் செலுத்தியிருப்பினும், 2019 ஆம் ஆண்டு சனவரி 18 ஆந் திகதியில் பௌதீக முன்னேற்றம் 5% நிலவியதுடன், முற்பணத்தின் பாதுகாப்பு காலமும் முடிவுற்றிருந்தது. | உடன்படிக்கை பிரகாரம் பௌதீக முன்னேற்றம் அடைந்துக்கொள் ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரி-விக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) அருகாமயிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற கருத்திட்டத்தின்கீழ் திரப்பனை மகாநாம கல்லூரியின் விளையாட்டு தொகுதி நிருமாணிப்பதற்கு 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 12 ஆந் திகதி பிரதான அமைச்சு செயலாளரால் ரூபா.21,581,698 ஆன பெறுமதிக்கு ஒப்பந்த நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. விளையாட்டு மைதானம் நிருமாணிப்பதற்கு பூமியில்மேற்புற பகுதியிலிருந்து மண்ணை அகற்றப்பட்டு Structural Level செய்யாது பொறியியல் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. | பொறியியல் மதிப்பீடுகளை சரியாக தயாரித்தல் வேண்டும். | அபிப்பிராயம் தெரி-விக்கப்படவில்லை. |

5.7.2 கைவிடப்பட்டிருந்த கருத்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவ-லரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| வட மத்திய மாகாணத்தில் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் பொறியியல் அலுவல்கள் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 1,777 மில்லியன் தொகையிலான 473 கருத்திட்டங்கள் பொருட்டு கருத்திட்டங்களை தயாரித்தல், பொறியியல் மதிப்பீடுகளை தயாரித்தல் அடங்களாக பொறியியல் ஆலோசனை சேவைகளுக்கு ஏற்புடையதாக அடிப்படை பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும், அதில் ரூபா. 977 மில்லியன் தொகையிலான 192 கருத்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பெறுமதி ரூபா.800 மில்லியன் தொகையிலான 281 கருத்திட்டங்கள் மட்டுமாகும். | நடைமுறைப்படுத்த வேண்டிய பொறி-யியல் அலுவல்கள் பொருட்டு மட்டும் கருத்திட்டங்களை தயாரித்தல், பொறி-யியல் மதிப்பீடு-களை தயாரித்தல் என்பவற்றை மேற்-கொள்ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

5.7.3 எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை (Out Come) பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவ-லரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| (அ) வடமத்திய மாகாணத்தின் சுற்றுலாத் துறை தொழிலை ஊக்குவிப்பதற்கு பிரதான அமைச்சினால் 2016 ஆம் ஆண்டு மே மாதம் மற்றும் யூன் அகிய மாதங்களில் கொள்வனவு செய்திருந்த ரூபா.1,000,000 பெறுமதியிலான Self-operated Information Machine 05 இயந்திரங்கள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | இந்த இயந்திரங்களில் ஓராண்டிலான உத்தரவாதக் காலம் 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதியில் முடிவடைந்திருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை குறித்த 05 இயந்திரங்களில் 03 இயந்திரங்களை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. எஞ்சிய 02 இயந்திரங்களையும் 2017 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் பொருத்தப்பட்டிருந்தது. | தேவையை கவனத்தில்கொண்டு பெறுகைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். | இயந்திரங்களில் உத்தரவாதக் காலம் 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி முடிவுற்ற போதிலும், அதன் பின்னர் இலவசமாக 04 முறை சேவைகளை பெற்றுக்கொண்டுள்ளதாக குறிப்பிடுகின்றேன். |
| (ii) | 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்த எல்லா இயந்திரங்களும் செயலற்ற நிலையில் இருந்த படியால் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு செலுத்தியிருந்த ரூபா.1,000,000 ஆன பணத் தொகை பயனற்ற செலவாக காணப்பட்டது. | இந்த தொகை பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்களிடமிருந்து அறவிடுதல் வேண்டும். | அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை புகையிரத இடங்களில் 02 இயந்திரங்களை பொருத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் பாதுகாப்பு பிரச்சினை காரணமாக இந்த 02 இயந்திரங்களும் பிரதான செயலகத்தில் மற்றும் பிரதான அமைச்சில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. |
| (ஆ) | 2000 ஆம் ஆண்டில் கெபித்திகொல்லாவ பிரதேச மருத்துவமனையை, ஆரம்ப மருத்துவமனையாக தாபித்து நிபுணத்துவ மருத்துவ சேவைகளையும் நடைமுறைப்படுத்த முடியுமானவாறு தேவையான கட்டிடங்களையும் மருத்துவ உபகரணங்களையும் வழங்கப்பட்டிருந்தன. ஆயினும், இது வரை மருத்துவமனைக்கு தேவையான சிறுநீரக நோய், மகப்பேற்று இயல், உடற் நோய் நிபுணர்கள் மற்றும் சிறுவர் நோய்கள் தொடர்பான நிபுணத்துவ மருத்து-வர்களின் சேவை கிடைக்கப்பெறாமை காரணமாக நிருமாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் மற்றும் CT ஸ்கான் இயந்திரங்கள் போன்ற மருத்துவ உபகரணங்கள் குறை பயன்பாட்டுடன் இருந்தன. அதே போன்று மேற்படி நிலைமையின்மீது குறித்த பிரிவுகளிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய சேவை கிடைக்கப்பெறாமை காரணமாக பிரதேச மக்களுக்கு அநுராதபுரம் / வவுனியா நகரங்களில் அமைந்துள்ள மருத்துவமனைகளுக்கு சென்று சிகிச்சை பெற வேண்டி ஏற்பட்டுள்ளது. | தேவையான மனித வளங்களை பூர்த்தி செய்து மருத்துவமனையில் எல்லா மருத்துவ உபகரணங்களும் அடங்கலாக கட்டிடங்களை உபயோகப்படுத்தி பூரண மருத்துவ சேவையினை மக்களுக்கு வழங்குதல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். நிபுணத்துவ மருத்துவர்கள் போதியளவில் நேர்வரிசை அமைச்சினால் வழங்காமை இந்த நிலைமைக்கு காரணமாகியுள்ளது. |

5.8 சொத்துக்களின் முகாமைத்துவம்

-------------------------------

பயனற்ற / குறை பயன்பாட்டு சொத்துக்கள்

--------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டில் வட மத்திய மாகாணத்தில் பிரதான அமைச்சினால் ரூபா. 02 மில்லியன் தொகை செலுத்தப்பட்டு கொள்வனவு செய்திருந்த கழிவு பொருட்களை எரிக்கும் இயந்திரம், 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆந் திகதி கெபித்திகொல்லாவ ஆரம்ப மருத்துவமனையிடம் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும், இந்த இயந்திரம் அன்றைய திகதி தொடக்கம் 2019 ஆம் ஆண்டு சனவரி 10 ஆந் திகதி வரை பயன்படுத்தாது பொதியிடப்பட்ட நிலையிலயே பயனற்று இருந்தது. | தேவைக்கு ஏற்ப வகையில் தரத்துடன்கூடிய பொருட்களை கொள்வனவு செய்து பயன்படுத்தல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஆ) | பர்டி பிரேமலால் மன்றத்தால் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திடம் வழங்கியிருந்த எல்லா வசதிகளுடன் கூடிய ‘‘சுவ மக’’ நடமாடும் முருத்துவ சேவை வண்டி, வாகனங்களின் சர்விஸ் நிலையத்தில் 02 வருடங்களுக்கு அதிகமான காலம் பயனற்று நிறுத்தப்பட்டிருந்தது. | உபயோகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | பொ/பெந்திவெவ மகா வித்தியாலயத்தின் நூலகப் புத்தகங்கள், தரத்துடன்கூடிய உள்ளீடுகள், பாடசாலை அடிப்படையாகக் கொண்ட பொருட்களை கொள்வனவு செய்தல் என்பவற்றுக்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா.613,909 ஆன தொகையும் பொ/சேவையற்ற கல்லூரியிடம் வழங்கியிருந்த ரூபா.243,000 தொகையும் நடைமுறை கணக்குகளில் பயனற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பாடசாலைகளுக்கு கிடைக்கப்பெறும் பணத் தொகையினை உபயோகப்படுத்தல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஈ) | 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்குள் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டுள்ள 06 வாகனங்கள் தொடர்பில் 2015 ஆம் ஆண்டு 02/2015 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாது மாகாண காலவி திணைக்களத்து நிலத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகும் வகையில் பாதுகாப்பின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | 2015 ஆம் ஆண்டு 02/2015 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

5.9 அலுவலர் குழாத்தின் நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| (அ) மாகாண ஆயர்வேத திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் குழாம் 647ம், உண்மையான அலுவலர் குழாம் 481ம், வெற்றிடமான தொகை 166 ம் ஆகியது. | திணைக்களத்தின் செயலாற்றுகை அதிகரிப்பதற்கு பற்றாக்குறையாக உள்ள அலுவலர் குழாத்தின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளுதல் வேண்டும். | வெற்றிட பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) மாகாண சபையில் பாடசாலை அலுவலர் குழாத்தில் 1,087 ஆன அங்கீகரிக்கப்பட்ட அதிபர் அலுவலர் குழாத்தில் 311 வெற்றிடங்களும், 16,830 ஆன அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் குழாத்தில் 747 வெற்றிடங்களும் நிலவின. | மாகாண கல்வி மட்டத்தினை அதிகரிப்பதற்கு வெற்றிடங்களை பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

5.10 பெறுகை

5.10.1 பெறுகை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவு சுற்றறிக்கை பிரகாரம் மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் 35 இல் 32 இல் 2018 ஆம் ஆண்டுக்காக பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் எல்லா நிறுவனங்களாலும் பெறுகை திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

06. கணக்கு நெறிமுறை மற்றும் நள்ளாளுகை

6.1 செயற்றிட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவ-லரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டு பெப்ருவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் மாகாண சபை மற்றும் அதன் அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள் 34 இல் மீளாய்விற்கான ஆண்டில் செயற்றிட்டம் தயாரிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் எல்லா நிறுவனங்-களாலும் செயற்-றிட்டம் தயாரிக்-கப்படுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |